ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2033/7 - 2017 අගෝස්තු මස 21 වැනි සඳුදා - 2017.08.21

2033/7 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: உது/2/2/10/98.

காணி அமைச்சின் இல.: 13/97/FR/323.

பொது மக்களின் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், உடதும்பர பிரதேச செயலகப் பிரிவில், கரபகெடிய கிராம அலுவலர் பிரிவில், மாடின்வத்த என்று அழைக்கப்படும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. மஹ 6628 இல் விபரிக்கப்பட்டுள்ள 3.8717 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணித் துண்டு எடுக்கப்படுகின்றது.

உரிமைகோருபவர்: திருமதி எம். சோமாவதி, கும்புக்கொல்ல, மீமுரே.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு, உடதும்பர பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

காணி உரிமையை உறுதிப்படுத்துவதற்கு இருக்கும் காணியின் உறுதி அல்லது வேறு ஆவணங்கள் பரிசோதனை செய்யும் திகதியில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

சுஜானீ ஆர். விஜேதுங்க,
பிரதேச செயலாளர்,
உடதும்பர.

பிரதேச செயலகம்,
உடதும்பர,
2017, யூலை 28.

9 - 09

1A - G 26106 - 68 (2017/08)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: DS/VW/LA/SF/ 08.
காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் இல.:
4-3/4/2014/LO/241.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

| | |
|---|---|
| ஆரம்ப பட இல. | : யா 2858 |
| அமைப்பு கிராமம் | : வட்டுக்கோட்டை கிழக்கு |
| கிராம அலுவலர் பிரிவு | : வட்டு. தென்மேற்கு J/166 |
| பிரதேச செயலகப் பிரிவு | : வலிகாமம் மேற்கு சங்கானை |
| மாவட்டம் | : யாழ்ப்பாணம் |
| மாகாணம் | : வடக்கு மாகாணம். |

**துண்டு இல. 1**

காணியின் பெயர்: அணுப்பு; விபரம்: வெற்றுக் காணி; உரிமை கோருபவர்: குமாரசாமி குலநாதன், வட்டு.தென்மேற்கு, வட்டுக்கோட்டை; விஸ்தீரணம்: 0.3373 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 04 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு, வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

காணியின் உரிமையை ஒப்புவிக்கும் உறுதிகளையும் மற்றும் சாதனங்களையும் விசாரணையின் பொழுது சமர்ப்பிக்க வேண்டும்.

எஸ். பிரேமினி,
பிரதேச செயலாளர்,
வலிகாமம் மேற்கு.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகம்,
சங்கானை.
2017, யூலை 28.

9 - 10

---

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

காணி அமைச்சின் குறிப்பு இல.: HIK/DS/LND/04/02/46.
பிரதேச செயலகத்தின் குறிப்பு இல.: 4/3/8/2012/PC/41.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், ஹிக்கடுவ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 42, பிட்டிவெல்ல (வடக்கு) கிராம அலுவலர் பிரிவில், பிட்டிவெல்ல (வடக்கு) கிராமத்தில், மாவட்ட அளவையாளர் அதிபதியினால் தயாரிக்கப்பட்ட இல. 810158 உம் 2016.07.22 ஆந் திகதிய வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 0.0080 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய ஒரு காணித் துண்டு (01):

**துண்டு இல. 38**

காணியின் பெயர்: மஹவத்த அல்லது கடுகுறுந்து கஹவத்த; விஸ்தீரணம்: 0.0080 ஹெக்டயார்.

வடக்கு: துண்டிலக்கம் 32 மற்றும் 37; கிழக்கு: துண்டிலக்கம் 37 மற்றும் 39; தெற்கு: துண்டிலக்கம் 39 மற்றும் 15; மேற்கு: துண்டிலக்கம் 15, 32 மற்றும் 37.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு, ஹிக்கடுவை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

டபிள்யூ. எஸ். சத்தியாநந்த,
பிரதேச செயலாளர் (பதில்),
ஹிக்கடுவை.

பிரதேச செயலகம்,
ஹிக்கடுவை,
2017, யூலை 26.

9 - 11